கொஞ்சம் அதிக பிரசித்தமா இருக்கறது, ஆதி ஆச்சார்யாள், பகவத், □ங்கர பகவத் பாதாச்சார்யாள் ஸந்யாஸம் வாங்கிக்கறத்துக்கு முந்தி ஒரு ப்ரஹ்மசாரியா இருக்கற காலத்துல வந்து ஒரு நாள் பிக்ஷைக்கு, த்வாத□ி அன்னிக்கு பிக்ஷைக்கு போனாளா. போனா ரொம்ப ஏழை ப்ராஹ்மணன் ஒத்தர். ரொம்ப பக்தியா உள்ளவர். அவா வூட்டுக்கு போய் பிக்ஷை கேட்போம்னுட்டு போனா. அவாத்துல ஒண்ணுமே இல்ல, அன்னிக்கு த்வாத□ி சமைக்கறத்துக்கு கூட இல்ல. அவர் உஞ்சவ்ருத்திக்கு போயிருக்கார். ஆனா மொத நாள் வந்து த்வாத□ி அன்னிக்கு நெல்லிக்கா சாப்பிடணுமேங்கறத்துக்காக நல்ல நெல்லிக்காயா எங்கயாது எடுத்துண்டுருந்தோமானா யாரானும் கோவிச்சுக்குவாளோன்னு அழுக நெல்லிக்காயா ஒரு நெல்லிக்காய எடுத்துண்டு வந்து யாரானும் ஏண்டா எடுத்துண்டு போறன்னு கேட்டா கூட இது அழுகல், அதுனால எடுத்துண்டு வந்தேன்னு சொல்லலாம்னு தைர்யம் பண்ணிண்டு ஒரு பிறைல கொண்டுந்து வெச்சுருந்தார். அது கூட இந்த அம்மாளுக்கு தெரியாது. இந்த, அவர் வெளில போயிருந்தார். ஆச்சாரியாள் ப்ரஹ்மசாரியா இருந்து ப்ரஹ்மசாரின்னா, ஸந்யாஸம் எட்டாவது வயசுலயே ஆயிட்டுது. ஆறாவது வயசுல, ஏழாவது வயசுல,அஞ்சாவது வயசுல உபநயநம் ஆயிடுத்து ஆச்சாரியாளுக்கு. எட்டாவது வயசுல ஸந்யாஸம் ஆயிட்டுது. ஆறாவது வயசு, ஏழாவது வயசுல தான் இருக்கணும் அது, அங்கேர்ந்து வந்து போய் அந்த வூட்டுல போய் கேட்டார். கேட்ட உடனே அந்த ப்ராஹ்மணன் இல்ல. வூட்ல அரிசி இல்ல, ஒண்ணும் இல்ல, வெறகு இல்ல, ஒண்ணுமே இல்ல. த்வாத□ி. அதனால எங்கயோ போயிருக்கார் அவர், சுள்ளி பொறுக்கிண்டு வருவோம், உஞ்சவ்ருத்தி வாங்கிண்டு வருவோம் அப்படின்னுட்டு போயிருக்கார் வெளில. அப்படி போயொரு வெளில வரத்துக்குள்ள இந்த அம்மா வந்து இப்பேற்பட்ட ஸாக்ஷாத் அபர ஸூர்யனா , ஸூர்ய தேஜஸ் மாதிரி வந்திருக்கற ஒரு கொழந்த, அந்த கொழந்தைக்கு வந்த உடனே நமக்கு குடுக்கறத்துக்கு ஒண்ணும் இல்லயே அப்படின்னு ரொம்ப துக்கப் பட்டு ஒண்ணுமில்லன்னு இங்க வந்து சொல்றதுக்கு ஸங்கோஜம், இங்க வந்து பார்த்தோமானா இந்த, இப்பேற்பட்ட இந்த தேஜஸ் நம்மாத்து வாசல்ல வந்து நிக்கறப்ப ஒண்ணுமில்லனு சொல்லவாவது, இன்னொரு தரம் போய் பார்ப்போம், அங்க போ, அங்க போய், ஒண்ணும் ஒண்ணையும் காணாத இருக்கறப்ப என்னத்த கொண்டு வரதுன்னுட்டு சரி ஒண்ணுமில்லன்னு சொல்லிடுவோம்னு வெளில வரா . வெளில வரா, திரும்பி, திரும்பி போறா. வெளில வந்துட்டு, வந்துட்டு, கண்ல ஜலம் தேம்பிண்டு திரும்பி, திரும்பி வந்து பார்த்துட்டு, ஏன் இந்த மாதிரினுட்டு, இங்க சொல்றத்துக்கும் மனசு வல்ல. உள்ள போய் பார்த்தா ஒண்ணும் இல்லவும் இல்ல. எல்லாத்தையும், எல்லா எடத்துலயும் தேடிட்டா. அப்பறம் மூணாந்தரம் பார்க்கறப்போ ஒரு இது ஒண்ணு

ஆப்டது, எங்கயோ ஒரு அழுக நெல்லிக்கா ஒண்ணு கனிஞ்சதா, அத  ஒண்ண மாத்ரம் பார்த்தா.  இது, இதையாவது கொண்டு வந்து  இப்பேற்பட்ட கொழந்தைக்கு கைல போடறதுன்னுட்டு. அப்பறம் என்ன, என்னது, ஒரே, உனக்கு ஒரே என்ன கண்ல ஜலம் கொட்டறதே அப்படின்னுட்டு  ஆச்சார்யாள் அந்த அம்மாவக் கேட்டா. இல்ல கொழந்த வந்து,  நான் , எனக்கு ஒண்ணுமில்ல, வெளில போய் ஒண்ணுமில்லன்னு எப்படி சொல்றது,  இங்கேர்ந்து பார்க்கறப்போ, நான் பார்த்தா எப்படி அனுப்பறது, எனக்கு ஒண்ணும் சொல்லத் தெரியல. எதாவது ஒண்ணு இருக்கும் எடுத்துண்டு வான்னார். எதாவது ஒண்ணு இருக்கும்ன்ன உடனே இந்த மாதிரி  எதானும், எதா இருந்தாலும்  இருக்கட்டும் அப்படின்னுட்டு, இது ஒரு, நெல்லி,ஒரு அழுக நெல்லிக்கா ஒண்ண அழுகாம, இந்த கைல,  இந்த தாமரைப் புஷ்பம் போல இருக்கே இந்த கை. இதுல கொண்டு வந்து இந்த அழுகல நெல்லிக்காயயா கொண்டுந்து போடறதுன்னுட்டு, எனக்கு ரொம்ப துக்கமா இருக்குன்னு சொன்னா. எதா இருந்தாலும் நூ கொண்டு போட்டு தான ஆகணும் அப்படின்னுட்டு ஆச்சார்யாள்ட்ட சொன்ன உடனே ரொம்ப அழுதுண்டு, துக்கப் பட்டுண்டு ஒரு பக்கம், ஒரு பக்கம் கிள்ளினா தான்  கொஞ்சம் அதுல நெல்லிக்கா இருக்கும். பாக்கி எல்லா அழுகலா இருக்கு. அதக் கொண்டு வந்து ஆச்சார்யாள் கைல போட்ட உடனே அம்பாள, மஹா, மஹா மஹாலக்ஷ்மிய ஸ்துதிச்சு ஆச்சார்யாள் வந்து ஸ்தோத்ரம் பண்ணினா. ஸ்தோத்ரம் பண்ணி,  ..ம் நெல்லிக்கா எவ்வளவு பெரிசு இருக்கோ அவ்வளவு முஹூர்த்த காலம் ஒரே ஸ்வர்ண மயமான நெல்லிக்காயா வர்ஷிக்கணும். அந்த ஆ..ம் இருக்கற இந்த, மலையாளத்துலல்லாம் வூடெல்லாம் ஒரு வேலி கட்டி தான் நடுவுல குடிசை இருக்கும். வேலி கட்டி இருக்கும். பெரிய வூடா, பெரிய கட்டிடமா இருந்தாலும் சரி, வேலியினுடைய வேலிக்கு இந்த 'அத்ருதி'  னு சொல்றது மலையாளத்துல. அந்த அத்ருதிக்குள்ள  இருக்கும்படியான எவ்வளவு உள்ள இருக்கோ  இவ்வளவுலயும் ஸ்வர்ண விருஷ்டி  ஒரு முஹூர்த்த காலமும் வர்ஷிக்கணும்னுட்டு. இன்னும் எத்தனையோ ஜென்மங்கள் இவா தாரித்ரயம் அடையனும், அனுபவிக்க வேண்டிய கர்மா இருக்கு அவாளுக்கு  அப்படின்னு சொன்னா, நான் இப்ப உன்னைப் பார்த்து ப்ரார்த்திக்கறேன்னா இந்த ப்ரார்த்தனைல அந்த கர்மாவெல்லாம் போயிடாதா, இந்த ப்ரார்த்தனைக்காக அவாளுக்கு எத்தன,  இன்னும் அதுக்கு மேல ஜென்மம் இருந்தாலும் அந்த ஜென்மத்தினுடைய ஒரு இதயும் என்னுடைய இந்த மாதிரி நான் ப்ரார்த்திக்கறேன்.  என்னுடைய ப்ரார்த்தனைக்காகவாது,  அந்த கர்மாக்கு, கர்மாவெல்லாம் நிவர்த்தி பண்ணி நூ அநுக்ரஹம் பண்ணனும்னு சொன்னா. சொன்ன உடனே அம்பாள் மஹாலக்ஷ்மி  வந்து அநுக்ரஹம்  பண்ணினாள்னு பேரு.

அப்படி  ஒரு பத்து, பதினஞ்சு ஸ்லோகம் அதுல இருக்கு  இந்த கனகதாரா ஸ்தோத்ரத்துல. அந்த ஸ்தோத்ரத்துல,

இத, இத இந்த இந்தமாதிரி ப்ரார்த்தனை பாக்கி அம்பா, மஹாலக்ஷ்மியினுடைய ஸ்தோத்ர ரூபம் மாதிரி தான் இருக்கு பாக்கி எல்லாம். ஸாக்ஷாத் இது போல இருக்கும் படியான மேகத்த போல இருக்கும் படியான ஸாக்ஷாத் பகவானுடைய ஒரு திருமேனில  ஒரு மின்னலும் கொடியப் போல இருக்கும் படியான ஸாக்ஷாத் தாயார்னுட்டு இந்த மாதிரி அர்த்தத்துல தான்  நூளக்க சொல்லிண்டு வந்துண்டுருக்கு. மத்தியில ஒரு ஸ்லோகத்துல மாத்திரம் இந்த அர்த்தத்த ஆரோ ஒத்தருக்கு அநுக்ரஹம் பண்றத்துக்காக அவாளுக்கு நூ அநுக்ரஹம் பண்ணனும், அப்படின்னு சொல்லும் படியான ஒரு பொருள் கொடுக்கும் படியான ஒரு ஸ்லோகம் மத்தியில இருக்கு இதுல.

த3த்3யாத் த3யானுபவன: த்3ரவிணாம்பு3தா4ராம்
அஸ்மின் அகிஞ்சன விஹங்க3□ி□ெள விஷண்ணே
து3ஷ்கர்ம க4ர்மம் அபநூய சிராய தூ3ரம்
நாராயண ப்ரணயினீ நயனாம்பு3வாஹ:

**दद्यात् दयानुपवनः द्रविणाम्बुधाराम्**
**अस्मिन् अकिञ्चन-विहङ्गशिशौ विषण्णे ।**
**दुष्कर्म-घर्मम् अपनीय चिराय दूरं**
**नारायण-प्रणयिनी-नयनाम्बुवाहः ॥**

“ நாராயண ப்ரணயினீ ” நாராயணனிடத்துல நெறஞ்ச பிரேமைய ப்ரணயத்தை வைத்திருக்கும் படியான தாயார்
“ நாராயண ப்ரணயினீ ” அவளுடைய நயனம், நயனம்னா கண்ணுக்கு பேரு. அவளுடைய கண்ணாகிற நேத்ரமாகிற “ அம்புவாஹ: ”.

“ அம்புவாஹ: ” னா மேகம்னு அர்த்தம். அம்புனா ஜலம். அப்பு, அம்பு இதெல்லாம் ஜலத்துக்குப் பேர். " வாஹ: " னா ஜலத்த வஹிக்கரது மேகம்.

“ நாராயண ப்ரணயினூ ” ஸாக்ஷாத் நாராயணனிடத்துல பிரேமை கொண்ட மஹாலக்ஷ்மி தாயாருடைய நயனம், கண்ணாகிற
“ அம்புவாஹ: ” மேகமானது, “ த்ரவிணாம்புதாராம் தத்யாத் ”.
“த்ரவிணம்” பொருள் என்னும்படியான " அம்புதாராம் " தூர்த்தத்தினுடைய தாரைகளை, தாரையை " தத்யாத் " கொடுக்கட்டும். அது மேகமானத்துனால அது தாரைய தான தூர்த்ததாரைய தான கொடுக்கணும் மஹாலக்ஷ்மியினுடைய கடாக்ஷமாகிற ஒரு மேகமானது த்ரவிணம் பொருள் என்னும்படியான " அம்புதாராம் " தூர்த்தத்தினுடைய தாரையத்தை, தாரையை " தத்யாத் " கொடுக்கட்டும்.

“ அஸ்மின் அகிஞ்சன விஹங்க□ி□ெள விஷண்ணே ”
யாரிடத்துல குடுக்கறது இந்த மாதிரி பொருள்ங்கற தாரைய மேகம் வந்து ஒரு சாதகம்ங்கற ஒரு பக்ஷிக்கு மேகம் வர்ஷிச்சா தான், அதனுடைய தூர்த்தமானது அதுக்குள்ள போகும்ங்கறது சாதக பஷிங்கறதப் பத்தி கவிகள்ளாம் வர்ணிக்கற வழக்கம். அதுக்கு தொண்டைல ஓட்டை ஒண்.. ஓட்டை இருக்குமாம். வெறுன்னே வாயினால, மூக்குனால சாப்பிட்டா, சாப்பிட்ட ஜலம் தொண்டை வழியா அது, தொண்டை ஓட்டை வழியா வெளில வந்துருமாம்.

அதுக்காக ஆ.ஆ., ஆகாசத்தில அப்படியே பார்த்துண்டு கூழ பார்த்துண்டு ஜலம் குடிச்சோமானா இந்த வழியா வந்துடறது. ஆகாசத்துல வாய தொறந்துண்டு, தொண்டை தண்ணிய, தொண்டய ஓட்டைய தொறந்துண்டு இருந்தா தான், அப்படியே இந்த ஜலம் உள்ள விட்டு அப்படியே கூழ போகுமாம் அதுக்கு. அதனால தான் சாதக பக்ஷிய அப்படி சொல்ற வழக்கம். எப்பவும் எழுதற வழக்கம்.

இந்த மாதிரி அகிஞ்சனாளானா ஒன்று ஒரு பரம தரித்ராளான

“விஹங்க◌ி◌ெ◌ள” சாதக, விஹங்கம்னா பக்ஷினு பொதுவா அர்த்தம், இந்த இடத்துல மேகம் வர்ஷிக்கறதுனு சொன்னத்துனால சாதக பக்ஷினு அர்த்தம் பண்ணிக்க வேண்டியது. சாதக பக்ஷி, அதனுடைய குஞ்சு. பெரிசா இருந்தாலும் எப்படியாவது சம்பாதிச்சுக்கலாமோ என்னமோ, வேற ஒண்ணும் தெரியாது அதுக்கு. இந்த பரம தரித்ராளா இருக்கறவா எதுக்கு உபமானம்னா சாதக பக்ஷி குஞ்சு எப்படி இருக்கோ அது போல மேகத்தையே எதிர்பார்த்துண்டுருக்கு.

“ அஸ்மின் அகி ” அகிஞ்சனனா ஒண்ணும் இல்லாதவானு அர்த்தம்.

“ அகிஞ்சன விஹங்க◌ி◌ெ◌ள விஷண்ணே ”

ரொம்ப துக்கம், கண்ல தாரை தாரையா ஜலம் விட்டுண்டுருக்கு இந்த சாதக பக்ஷியினுடைய ◌ி◌ூ, குஞ்சு. மனுஷாள்னு கூட சொல்லல, இந்த ஒரு சிறு சாதக பக்ஷி குஞ்சு இருக்கே, இந்த குஞ்சுவினுடைய விஷயத்துல த்ரவிணம்ங்கற பொருள்ங்கற ஒரு அம்பு தாரயை தூர்த்த தாரயை “த3த்3யாத்” அருள வேண்டும். எது அருளும்? இந்த மேகமானது. எந்த மேகம்? நாராயண ப்ரணயினீ யினுடைய கடாக்ஷமாகிற மேகம்.

த3த்3யாத் த3யானுபவன: த்3ரவிணாம்பு3தா4ராம்
அஸ்மின் அகிஞ்சன விஹங்க3◌ி◌ெ◌ள விஷண்ணே

அதுக்கு ரொம்ப பாபங்கள்ளா இருக்கே, இன்னும் எத்தனையோ ஜென்மம் தாரித்ரயத்த அனுபவிக்க வேண்டிய காரியம் இருக்கே அதுக்கு அப்படின்னு சந்தேகப் பட்டா "து3ஷ்கர்ம க4ர்மம் அபநீய" இது ம, இது வெய்யில் நாள் ஆச்சே இது, வெய்யில் நாள்ள மழை எப்படி பெய்யறது, அப்படின்னு கேட்டா க4ர்மம்னா வேனிற் காலம்னு அர்த்தம். வெய்யில் நாள்னு அர்த்தம். துஷ்கர்மா நெறய இருந்தாலும் அத நல்ல சித்தரைல கோடை மழைனு சொல்றதுண்டு. ரொம்ப லோகம் முழுக்க கஷ்டத்த அடஞ்சுட்டுதானா, அப்படி ப்ரார்த்திக்கற காலத்துல அந்த மாதிரி தவிச்சுண்டு இருக்கற காலத்துல பெய்யற மழை தான் உண்மையா ஜனங்களுக்கு ஒரு தாபத்த

நிவர்த்தி பண்ற மழை. துஷ்கர்மாங்கற ஒரு  க4ர்மம் இருக்கே, க4ர்மம்னா இந்த உஷ்ண காலம்னு அர்த்தம். வெய்யில் காலம்னு அர்த்தம்.     “து3ஷ்கர்ம க4ர்மம் அபநூய”  நிவர்த்தி பண்ணி     “ நாராயண ப்ரணயினூ நயனாம்பு3வாஹ:”

“த3த்3யாத் த3யானுபவன: த்3ரவிணாம்பு3தா4ராம்

அஸ்மின் அகிஞ்சன விஹங்க3◌ி◌ெ◌ள விஷண்ணே

து3ஷ்கர்ம க4ர்மம் அபநூய “

“அபநூய” னா நிவர்த்தி பண்ணி, துஷ்கர்மம்ங்கற ஒரு க4ர்மம், தாபத்த நிவர்த்தி பண்ணி

“த3த்3யாத் த3யானுபவன: த்3ரவிணாம்பு3தா4ராம்

அஸ்மின் அகிஞ்சன விஹங்க3◌ி◌ெ◌ள விஷண்ணே

து3ஷ்கர்ம க4ர்மம் அபநூய சிராய தூ3ரம்”

அந்த துஷ்கர்மா எத்தனையோ காலம் காலமாய் அந்த பாபங்கறது சொமந்து, சொமந்து,  சொமந்து, சொமந்து இருக்கு. அவைகளெல்லாம் தூரம், இன்னிடத்தில் இருக்குன்னு தெரியாம அவ்வளவு தூரத்தில விலக்கி அத துஷ்கர்மாவ, “சிராய தூ3ரம் நாராயண ப்ரணயினூ நயனாம்பு3வாஹ:”

அந்த  நாராயண ப்ரணயினூ யினுடைய நயனமாகிற,  கடாக்ஷமாகிற, அம்புவான மேகமானது, இந்த“ த3த்3யாத்” மழையை, த்ரவிணம்ங்கற பொருள்ங்கற மழையை இந்த சாதக  பக்ஷிக்கு கொடுக்கணும். ஏன்னா இதத் தவிர வேற ஒண்ண குடுக்கணும்னு ப்ரார்த்தனையே  அதிகமா இல்ல.பாக்கி எல்லாம் ஏதோ அநுக்ரஹம் பண்ணனும் அருள் வேணும் அப்படின்னு மாத்ரம் தான் இருக்கு.  இந்த எடத்துல தான் அஸ், ஆருக்கோ ஒத்தருக்கு ஒரு சாதகம் குஞ்சு போல இருக்கும்படியான ஒரு, ஒத்தருக்கு நிறைய வர்ஷிக்கணும். துஷ்கர்மம் இருக்கேன்னு கேட்டா துஷ்கர்மத்தல்லாம், பாபங்கள்ளாம் நிவர்த்தி பண்ணி அவாளுக்கு வர்ஷிக்கணும்

அப்படின்னு ப்ரார்த்தனை. கதை எப்படி இருக்கோ கதைய அனுசரிச்சு உள் ஸாக்ஷியம் னு சொல்ற மாதிரி internal evidence சொல்ற மாதிரி அதுவும் இதுல சேர்ந்துருக்கு இந்த ஒரு ஸ்லோகத்துல. அந்த கதை எப்படி இருக்கோ கதைய அனு, அனுசரிச்சு அந்த மாதிரி எல்லாருக்கும் ஒரு தா, கஷ்டத்த நிவர்த்தி பண்ணி, தாபத்த நிவர்த்தி பண்ணி, தாரித்ரயம் நிவர்த்தி பண்ணனும். தாபத்தையும் நிவர்த்தி பண்ணனும்ங்கற ஒரு பாபத்தையும் நிவர்த்தி பண்ணனும். க4ர்மம்ங்கறத்துனால தாபத்த நிவர்த்தி பண்ணனும். துஷ்கர்மானத்துனால பாபத்த நிவர்த்தி பண்ணனும்."அகிஞ்சன விஹங்க◌ ி◌ெ ள"ங்கறத்துனால வறுமையை நிவர்த்தி பண்ணனும். ஆகையால வறுமை, தாரித்ரயம், வறு, அந்த வறுமை தான் தாரித்ரயம். தாபம், பாபம் எல்லாத்தையும் நிவர்த்தி பண்ணி இந்த மேகமானது நெறய வர்ஷிக்கணும் அப்படின்னு ம் அங்க ஒரு ப்ரார்த்தனை இருக்கு. அந்த மாதிரி நாமும் அந்த மஹாலக்ஷ்மியினுடைய ஆச்சார்யாள் பண்ணின கனகதாரா ஸ்தோத்ரத்த நாமும் பாராயணம் பண்ணினோமானா நமக்கும் தாபம், பாபம், தாரித்ரயம் எல்லாத்தினுடைய நிவர்த்தி யும் நமக்கு ஏற்படும்ங்கற ஒரு அர்த்தத்தை வெச்சுண்டு தான் ஆச்சார்யாள் அத ஸ்தோத்ர ரூபமா பண்ணி இத நம், நம்முடைய நாள் வரைக்கும் அந்த ஸ்தோத்ரமானது நம், நம்முடைய காலம் வரைக்கும் வந்துண்டுருக்கு பெரியவாளுடைய பரம்பரையா வந்துண்டுருக்கு நமக்கு.

த3த்3யாத் த3யானுபவனோ த்3ரவிணாம்பு3தா4ராம்
அஸ்மின் அகிஞ்சன விஹங்க3◌ ி◌ெ ள விஷண்ணே
து3ஷ்கர்ம க4ர்மம் அபநூய சிராய தூ3ரம்
நாராயண ப்ரணயினீ நயனாம்பு3வாஹ: